# 2020 வசந்த காலத்தில் இருந்து இங்கிலாந்தில் உறுப்பு தானம் தொடர்பான சட்டம் மாறிக்கொண்டே இருக்கிறது

## இந்த துண்டறிக்கை உங்கள் விருப்பங்களை விளக்குகிறது

### உறுப்பு மற்றும் திசு தானம் என்றால் என்ன?

உறுப்பு மற்றும் திசு தானம் என்பது உங்கள் உறுப்புகள் மற்றும்/அல்லது திசுக்களை நீங்கள் இறக்கும் போது மற்றவர்களின் உயிரைக் காப்பாற்ற அல்லது வாழ்வை மேம்படுத்த உதவுவதற்காக கொடுப்பதாகும்.

ஒரு உறுப்பு தானம் செய்பவர் ஒன்பது பேரின் வாழ்வைக் காப்பாற்றவோ மேம்படுத்தவோ முடியும். திசு மாற்றும் ஒரு நபரின் வாழ்க்கை நிலையைக் குறிப்பிடத்தக்க அளவில் மேம்படுத்துகிறது. இந்த வகை தானம், ஒருவர் மீண்டும் பார்க்க உதவும் கார்னியா, இதய குறைபாட்டிற்கு சிகிச்சையளிக்க மாற்று இதய வால்வு அல்லது கடுமையான தீக்காயங்களுக்கு சிகிச்சையளிக்கும் தோலை கொடையளிப்பதாக இருக்கலாம்.

### உறுப்பு தானம் பற்றிய சட்டங்கள் ஏன் மாறிக்கொண்டே இருக்கின்றன?

உடல் உறுப்பு தேவையின் காரணமாக UK ல் ஒவ்வொரு நாளும் சுமார் மூன்று பேர் இறக்கின்றனர், ஏனெனில் மாற்று அறுவை சிகிச்சைக்கு போதுமான உறுப்புகள் கிடைப்பதில்லை. ஆனால் கொடையளிக்க கூடிய சூழ்நிலையில் இருக்கும் நபர்கள் 1% மட்டுமே.

பெரும்பாலானோர் உறுப்பு தானத்தை கொள்கை அளவில் ஆதரிக்கிறார்கள் மற்றும் இறந்த பிறகு அவர்களின் உறுப்புகளை தானம் செய்ய தயாராக இருக்கிறார்கள். ஆனால், பலர் தங்கள் முடிவினை NHS உறுப்பு கொடையாளர் பதிவேட்டில் கையொப்பமிடுவதன் மூலமோ அல்லது அவர்களது குடும்பத்தினரிடம் சொல்வதின் மூலமோ தெளிவுபடுத்துவதில்லை. இந்த சட்ட மாற்றம் பெரும்பாலான மக்கள் காண விரும்பும் மாற்றத்தைப் பிரதிபலிக்கிறது, மேலும் அதிகமான உயிர்களை காப்பாற்றவும் மேம்படுத்தவும் உதவுகிறது.

### மாற்றப்படுவது என்ன?

2020 வசந்த காலத்திலிருந்து, இங்கிலாந்தில் உள்ள எல்லா வயதுவந்தோரும் இறக்கும் போது, ஒரு உறுப்பு மற்றும் திசு கொடையாளராக ஒப்புக் கொண்டதாகக் கருதப்படுவார்கள். கொடையளிக்கக் கூடாது என்ற முடிவைப் பதிவு செய்தவர்கள் அல்லது விலக்களிக்கப்பட்ட குழுக்களில் உள்ளவர்களைத் தவிர்த்து (‘இந்த மாற்றம் யாரைப் பாதிக்கும்?’ என்பதைப் பாருங்கள்), இது பொதுவாக ‘விலகல் அமைப்பு’ எனக் குறிப்பிடப்படுகிறது.

இதன் பொருள் என்னவென்றால், நீங்கள் உறுப்பு தானம் செய்ய விரும்புகிறீர்களா என்பதை உறுதிப்படுத்தவில்லை என்றால் – அதாவது NHS உறுப்பு கொடையாளர் பதிவேட்டில் ஒரு முடிவைப் பதிவு செய்வதன் மூலமோ அல்லது நண்பர்கள் அல்லது குடும்பத்தினரிடம் தெரிவிப்பதின் மூலமோ - நீங்கள் இறக்கும் போது உங்கள் உறுப்புகளை கொடையளிக்க ஒப்புக்கொண்டுள்ளதாகவே கருதப்படும்

உறுப்பு தானம் என்பது தாராள குணத்தின் பெரும் செயலாக உள்ளது. உறுப்பு தானம் செய்வதா இல்லையா என்பதைத் தேர்வுசெய்ய உங்களுக்கு இன்னும் உரிமை உள்ளது. நீங்கள் இறக்கும் போது உங்கள் உறுப்புகளை தானம் செய்வது குறித்து உங்கள் குடும்பத்தினரிடமும் கலந்தாலோசிக்கப்படும்.

## உறுப்பு தானம் தொடர்பான சட்டம் எப்போது மாற்றப்படுகிறது?

இந்த 'விலகல்' முறை இங்கிலாந்தில் 2020 ஆம் ஆண்டு வசந்த காலத்திலிருந்து நடைமுறைக்கு வரும்.

அதுவரை, நீங்கள் கொடையளிக்கக்கூடிய சூழ்நிலையில் இறந்தால், சிறப்பு மருத்துவ ஊழியர்கள் நீங்கள் ஒரு கொடையளிக்க முடிவெடுத்துள்ளீர்களா என்பதைச் சரிபார்க்க NHS உறுப்பு கொடை பதிவேட்டை தொடர்ந்து பரிசோதிப்பார்கள். நீங்கள் பதிவுசெய்திருந்தால், இது தொடர்பில் உங்கள் குடும்பத்தினர் கேட்கப்படுவார்கள். நீங்கள் கொடையாளராக பதிவு செய்யவில்லை எனில், உங்கள் சார்பாக முடிவெடுக்க உங்கள் குடும்பத்தினர் கேட்கப்படுவார்கள்.

சட்டம் மாற்றப்பட்டதும், நீங்கள் 18 வயதுக்கு மேற்பட்டவராக, பின்வரும் முறையில் இருந்தால் நீங்கள் உறுப்பு தானம் செய்ய ஒப்புக்கொள்கிறீர்கள் என்று கருதப்படும்:

- நீங்கள்' விலகவில்லை', அல்லது
- நீங்கள் விலக்கப்பட்ட குழுவில் இல்லை

இருப்பினும் உங்கள் குடும்பத்தினர் ஆலோசிக்கப்படுவார்கள்.

### இந்த மாற்றம் யாரைப் பாதிக்கும்?

இந்தப் புதிய சட்டம் இங்கிலாந்தில் உள்ள, மற்றும் இங்கிலாந்தில் மரணிக்கும் வயதுவந்தோருக்குப் பொருந்தும்.

இவர்களுக்குப் பொருந்தாது:

- 18 வயதிற்கு கீழ் உள்ளோர்
- புதிய ஏற்பாட்டினைப் புரிந்துகொள்ள மற்றும் முடிவெடுக்க போதிய மனநிலை இல்லாதோர்
- தங்கள் மரணத்திற்கு முன் இங்கிலாந்தில் 12 மாதங்களுக்குக் குறைவாக வசித்தோர்
- தன்விருப்பத்தில் இங்கிலாந்தில் வசிக்காதோர்

## நான் என்ன செய்ய வேண்டும்?

உறுப்பு தானம் தொடர்பான சட்டம் 2020 வசந்த காலத்திலிருந்து இங்கிலாந்தில் மாற இருப்பதால், அனைவரும் தாங்கள் உறுப்பு தானம் செய்ய விரும்புகிறார்களா என்பதை தீர்மானிக்க வேண்டும் மற்றும் அவர்களின் முடிவை தங்கள் குடும்பத்துடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என நாங்கள் விரும்புகிறோம்.

நீங்கள் உறுப்பு **கொடையாளராக விரும்பினால்**, NHS உறுப்பு கொடையாளர் பதிவேட்டில் கொடையாளராக பதிவு செய்யலாம்.

நீங்கள் உறுப்பு **கொடையாளராக விரும்பவில்லை எனில்**, NHS உறுப்பு கொடையாளர் பதிவேட்டில் 'கொடையளிக்க மறுக்கும்' முடிவை பதிவு செய்வதன் மூலம் விலகலாம்.

நீங்கள் NHS உறுப்பு கொடையாளர் பதிவேட்டில் **உங்கள் முடிவை ஏற்கனவே பதிவுசெய்திருந்தால்**, மேலும் உங்கள் முடிவு அப்படியே இருந்தால், நீங்கள் விரும்பியுள்ளதை உங்கள் குடும்பத்தினரிடம் சொல்ல வேண்டும்.

நீங்கள் ஏற்கனவே பதிவுசெய்திருந்தால், ஆனால் **பதிவுசெய்யப்பட்ட உங்கள் முடிவை மாற்ற விரும்பினால்**, இணையத்தில் 'உங்கள் விவரங்களைத் திருத்து' படிவத்தை நிரப்புவதின் மூலம் இதை எந்த நேரத்திலும் எளிதில் செய்யலாம்.

## NHS உறுப்பு கொடையாளர் பதிவேடு என்றால் என்ன?

NHS உறுப்பு கொடையாளர் பதிவேடு என்பது உறுப்பு தானம் குறித்து முடிவை பதிவு செய்தவர்கள் அனைவரின் விவரங்களையும் வைத்திருக்கும் ஒரு பாதுகாப்பான தரவுத்தளமாகும். இது ஒருவர் உறுப்பு மற்றும் திசு தானம் செய்ய விரும்புகிறாரா இல்லையா என்பதை இது பதிவு செய்கிறது. தானமளிக்க விரும்புவோருக்கு, அவர்கள் எந்த உறுப்புகள் மற்றும் திசுக்களை தானம் செய்ய விரும்புகிறார்கள் என்பதை இது பதிவு செய்கிறது. இப்பதிவினை சிறப்பு NHS ஊழியர்கள் மட்டுமே அணுக முடியும்.

NHS உறுப்பு கொடையாளர் பதிவேட்டில் உங்கள் முடிவைப் பதிவுசெய்வது மற்றும் நீங்கள் விரும்பியுள்ளதை உங்கள் குடும்பத்தினரிடம் சொல்வது ஆகியன உங்கள் முடிவிற்கு மதிப்பளிக்கப்படுவதை உறுதிசெய்ய சிறந்த வழிமுறைகள் ஆகும்.

**நினைவிற் கொள்க, நீங்கள் இறக்கும் போது, 18 வயதுக்கு மேற்பட்டவராகவும், விலக்களிக்கப்பட்ட குழுவில் இல்லாதவராகவும் மற்றும் விலகாதவராகவும் இருந்தால், நீங்கள் உறுப்பு மற்றும் திசு கொடையாளராக ஒப்புக் கொண்டதாகக் கருதப்படும்.**

**நீங்கள் எதை தேர்வு செய்திருந்தாலும், உங்கள் குடும்பத்தினரிடம் அதைச்சொல்வது முக்கியமாகும், இதனால் அவர்கள் உங்கள் முடிவை ஆதரிக்க முடியும். நீங்கள் எதிர்காலத்தில் உங்கள் முடிவை மாற்றிக்கொண்டாலும் அவர்களிடமும் சொல்ல வேண்டும்.**

**உங்கள் முடிவைப் பதிவு செய்ய organdonation.nhs.uk செல்லுங்கள்**

## 2020 வசந்த காலத்திற்குப் பின்னரும் கூட என் உறுப்புகளை தானம் செய்வது குறித்து எனது குடும்பத்தினரிடம் கேட்கப்படுமா?

ஆம். உறுப்பு மற்றும் திசு தானம் செய்வதற்கான விருப்பத்தைப் பற்றி ஆலோசிக்க கொடையளிக்க வாய்ப்புள்ளவரின் குடும்பத்தினர் எப்போதும் தொடர்பு கொள்ளப்படுவார்கள். இது NHS உறுப்பு கொடையாளர் பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்ட எந்தவொரு முடிவும் அண்மையில் அறியப்பட்ட உங்கள் முடிவு என்பதை உறுதிப்படுத்த உதவுகிறது. இந்த ஆதரவினை உறுதிப்படுத்த ஒரு சிறப்பு செவிலியர் குடும்பத்துடன் இணைந்து செயலாற்றுவார்.

உங்கள் நம்பிக்கைகளுக்கு ஏற்ப உறுப்பு தானம் நடைபெறுவதை உறுதிப்படுத்த உங்களின் கோரிக்கைகள் மற்றும் தேவைகளைப் பற்றி உங்கள் குடும்பத்தினர் எங்களிடம் கூறலாம்.

உங்கள் மருத்துவ, பயண மற்றும் சமூக வரலாறு குறித்த முக்கியமான தகவல்களை உங்கள் குடும்பத்தினர் எங்களுக்கு வழங்குகிறார்கள். இத்தகவல்கள் உங்கள் உறுப்புகளைப் பாதுகாப்பாக வேறொருவருக்கு வழங்க இயலுமா என்பதைச் சரிபார்க்க உதவுகின்றன.

## உங்கள் தேர்வுகள் பற்றி மேலும் அறிந்துகொள்ளுங்கள்

எங்கள் வலைத்தளத்தில் உறுப்பு மற்றும் திசு தானம் பற்றி இன்னும் பல பயனுள்ள தகவல்கள் உள்ளன:

organdonation.nhs.uk மற்றும் சமூக ஊடகங்களில் **@NHSOrganDonor**

நீங்கள் உங்கள் முடிவினை எடுத்ததும், அதை NHS உறுப்பு கொடையாளர் பதிவேட்டில் பதிவுசெய்வதும், உங்கள் விருப்பத்தைப் பற்றி உங்கள் குடும்பத்தினருக்கு தெரிவிப்பது முக்கியமாகும்.

உங்களுக்கு தேவையானதை வலைத்தளத்தில் கண்டுபிடிக்க இயலவில்லை அல்லது இன்னும் உறுதியாக தெரியவில்லை என்றால், எங்கள் சிறப்பு உதவிமையத்தை அழையுங்கள்:

0300 303 2094

நீங்கள் தொடர்புகொள்வது கடினமாக இருந்தால், எங்கள் செய்தி உரை தொடர் சேவையைப் பயன்படுத்துங்கள்:

18001 0845 730 0106

அரட்டை உரையாடலைப் பயன்படுத்த SMS செய்யுங்கள்:

07860 034 343

1 மே 2019 முதல், NHS செயலியைப் பயன்படுத்தும் எவரும் NHS உறுப்பு கொடைப் பதிவேட்டில் தங்கள் முடிவை பதிவு செய்ய அதனைப் பயன்படுத்தலாம்.

நீங்கள் ஆப் ஸ்டோர் அல்லது கூகிள் பிளேயிலிருந்து NHS செயலியைப் பதிவிறக்கலாம்.



ரோஹித் மாரடைப்பால் 55 வயதில் காலமானார். அவரது சிறுநீரகங்கள், இதய வால்வுகள் மற்றும் கார்னியாக்கள் தானம் செய்யப்பட்டு மற்றவர்களுக்கு உதவின